


# மீண்டும் மரியா!

மரியா இருதயம்



அர்ஜுனா விருது! இந்திய அரசின் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தால், தேசிய அளவில் நிறுவப்பட்ட இந்த விருது, விளையாட்டுத் துறைகளில் சிறந்த சாதனைகளைப் படைக்கும் வீரர்களுக்கு அங்கீகாரம் அளிக்க வழங்கப்படுகிறது. இந்த விருதைப் பெற விரும்பும் விளையாட்டு வீரர்கள், மற்றவர்கள் பின்பற்றுவதற்கான தரங்களை அமைக்கும் அசாதாரண அர்ப்பணிப்பைக் காட்ட வேண்டும். மேலும், சர்வதேச மட்டத்தில் செயல்திறனில் ஒரு நிலையான சிறப்பம்சம், ஊக்கமளிக்கும் தலைமைத்துவத்தின் வெளிப்பாடு, உயர் மட்ட விளையாட்டுத்திறன் மற்றும் ஒழுக்க உணர்வையும் கடைப்பிடிக்க வேண்டும்.

இந்த மதிப்புமிக்க விருது பெற்றவருக்கு, ரூபாய் 5 லட்சம் ரொக்கப் பரிசு, பண்டைய காலத்தில் வில்விளையாட்டில் சிறப்பாக கருதப்படும் அர்ஜுனனின் வெண்கல சிலை மற்றும் பாராட்டுச் சுருள் சான்றிதழ் கொடுக்கப்படுகிறது. இந்த விருதை வென்ற, அபூர்வ திறமையுள்ள வீரர்களும், வீராங்கனைகளும், வரலாற்றில் புதிய தடங்களை பதித்து, சர்வதேச அரங்கில், தம் நாட்டின் பெருமையையும், மகிமையையும் நிலைநிறுத்துகிறார்கள்.

இந்தியாவில், கேரம் விளையாட்டில் அர்ஜுனா விருது வென்ற ஒரே வீரர் மரியா இருதயம். மரியா அமைதியான, ஆடம்பரம் அற்ற, மிக எளிமையான சூழலில் வாழ்கிறார். சென்னையில் உள்ள சென்ட்ரல் ரயில் நிலையத்திற்கு பின்னால், குறுகிய தெருக்கள், பகட்டுகள், விளம்பரங்களிலிருந்து தொலைவில் உள்ள பெரியமேடு பகுதியில் வசிக்கிறார்.

கடற்படை மருத்துவமனை சாலையில் உள்ள 300 சதுர அடி அளவுள்ள சிறிய இடம், தன்னை ‘சென்னை மாவட்ட கேரம் சங்கம்’ என்று அறிவிக்கிறது. இந்த இடத்தை, இரு பகுதிகளாக பிரித்து, ஒரு பகுதியில் அலுவலக அறையும், மறு பகுதியில் விளையாட்டு பயிற்சிக்கூடமும் உள்ளன. இப்பயிற்சிக்கூடத்தில் மாணவர்களும், ஆர்வலர்களும் தத்தம் பயிற்சியாளரின் கண்காணிப்பில், ஒளிவிளக்கின் கீழுள்ள கேரம் பலகையில் பயிலுகிறார்கள். இங்குதான், கேரம் விளையாட்டில் உலக அளவில் இரண்டு முறையும், தேசிய அளவில் நான்கு முறையும் விருது பெற்ற வீரர் திரு. மரியா இருதயத்தை காணலாம்.

மகாபாரதத்தில் வந்த அர்ஜுனன் போல், அவருடைய கூர்மையான கண்கள், விளையாட்டு பலகையிலும், காய்களிலும், காய்கள் விழும் குழிகளிலும் நிலை குத்தி இருக்கும். மேலும், எதிராளியின் அசைவுகளை கண்காணித்து, அவற்றை எப்படி தடுத்து நிறுத்தலாம் என விரைவாக முடிவுகள் செய்யும். அந்த கண்கள், எல்லா காய்களும் திருப்திகரமாய் குழிகளில் விழுந்த பிறகுதான் வேறு திசையை நோக்கும். இம்மாதிரியான முழு கவனத்தையும், மன உறுதியையும் பெற பல ஆண்டுகள் பயிற்சி செய்ய வெண்டும். நாம் அந்த இடத்திலிருக்கும்போது, ஒரு முதன்மை குருவின் அருகில் இருப்பதை உடனே வெளிப்படையாக உணர்கிறோம். மரியா என்று சுருக்கமாக அழைக்கப்படும் இவர்,



எல்லோரையும் போல, தன் பொழுதுபோக்கிற்காக, பள்ளிப் பருவத்தில், ஒன்பதாம் வகுப்பு பயிலும்பொது, கேரம் விளையாட ஆரம்பித்தார். ஆனால், அவரிடம் தோற்ற ஒருவர் தன்னை தோற்கடிக்கும் போதுதான், அவர் கேரம் விளையாட்டில் தீவிரம் காட்டத் தொடங்கினார். அவர் வாழ்க்கையில் ஒவ்வொரு கட்டத்திலும், இந்த தோல்விகள்தாம் அவரை வழி நடத்தி, தன் தவறுகளை திருத்தி மேம்பட்ட திறனை அடைய விரும்ப வைத்தன. பள்ளிப்படிப்பில் பதினோராம் வகுப்பில் தோல்வி அடைந்தபின், அவர் வீட்டிலேயே தங்கி, கேரம் விளையாட்டில் முழுநேர கவனம் செலுத்தினார்.

அவரிடம் விளையாடி தோற்ற ஒருவர், தேசிய அளவில், அகில இந்திய விருது வென்றதுதான், அவர் வாழ்வில் வந்தது அடுத்த திருப்புமுனை. இந்த நிகழ்ச்சி, இளம் மரியாவை மாவட்ட அளவிலிருந்து மாநில அளவுக்கு கொண்டு செல்லுமளவுக்கு ஊக்குவித்தது. இறுதி சுற்றில், அவர் துரதிர்ஷ்டவிதமாக தோற்றாலும், மூன்றாம் இடத்தை தக்க வைத்துக்கொண்டார். அதனால், தேசிய அளவில் நடந்த போட்டிக்கு செல்ல வாய்ப்பு கிட்டியது. தேசிய அளவில் நடந்த கால் இறுதிச் சுற்றில் விளையாட தகுதி பெற்று, தோல்வியைத் தழுவினாலும், அவரால் அகில இந்திய அளவில் 6ம் இடத்தை பிடிக்க முடிந்தது. அப்போதிருந்து, திரு. கபிர் தாஸ் என்பவர், மரியாவின் உள்ளார்ந்த திறமையை கண்டுகொண்டு, விளையாட்டுத் திறனை மேம்படுத்த, சிறப்பு பயிற்சி கொடுக்க ஏற்பாடு செய்து ஆதரவு அளித்தார் என மரியா நன்றியுடன் நினைவுகூர்கிறார். மேலும், தன்னுடைய மாமா திரு. லாசர், இந்திய கேரம் முன்னாள் செயலர் திரு. பங்காரு பாபு, மற்றும் தமிழ்நாடு கேரம் முன்னாள் செயலர் திரு. ஆனந்தன் ஆகியோரின் வழி காட்டுதலுக்கு நன்றியுடன் இருக்கிறார். மேற்கண்ட இருவரும், பயிற்சி முகாமில், மரியாவின் திறமையைக் கண்டுகொண்ட பின், தனித்தனியாக அவருக்கு விளையாட்டு உத்திகளை கற்பித்து, தவறுகளை திருத்தி பயிற்சி அளித்தார்கள். தன் வாழ்க்கையின் சரியான கட்டத்தில், வழிகாட்டிகள் அமைந்தது அதிர்ஷ்டமே என்று அவர் சொல்கிறார்.

அவர், தர வரிசையில் 6ம் நிலையில் இருந்து, அகில இந்திய அளவில் 3ம் நிலைக்கு உயர்ந்தார். இதனால் அவருக்கு சென்னை சுங்கத்துறையில், விளையாட்டு வீரர்களுக்கான பணியிட ஒதுக்கீட்டில், அரசாங்க வேலை கிடைத்தது. தொடர்ந்து விளையாடுவதுதான் அவர் தன் வேலையை தக்கவைத்துக்கொள்ளும் வழியாதலால், அந்த தேவையே, அவரை உந்தும்

சக்தி தரும் எரிபொருளாக ஆயிற்று.
போட்டிகளில் ஒவ்வொரு முறை தோற்கும் போதும், அவர் மன வாட்டத்தில் துவளாமல், ஆட்ட இழப்பு எண்ணங்களில் ஏங்காமல், எந்த காய் மூலம் தோல்வி ஏற்பட்டதோ, அதை மீண்டும் நினைவுக்கு கொண்டுவந்து, அதை எப்படி தவிர்க்கலாம் என ஆழ்ந்து யோசிப்பார்.

பெற்றோர்களுக்கு மரியா கூறும் அறிவுரை என்னவென்றால், அவரவர் குழந்தைகள் தத்தம் பேரார்வத்தையும், வாழ்வின் முன்னுரிமையான செயல்களையும் எடையிட்டு சமநிலைப்பாட்டை காணவேண்டும். அவருடைய சொந்த வாழ்வில், பட்டதாரி கல்வித்தகுதி இல்லாததால், சென்னை சுங்கத்துறை பணியில், பதவி உயர்வு வாய்ப்புகளை நழுவ விட நேர்ந்தது.
ஆகவே, அடிப்படைக்கல்வி மட்டும் இல்லாமல், குறைந்த பட்சம் பட்டதாரியாக இருப்பது, பல வாய்ப்புகளை தட்டி திறக்க அவசியமாகும். இந்த காரணத்தினால்தான், அவர் தன் குழந்தைகளிடம் முதலில் படிப்புக்கு முக்கியத்துவம் கொடுத்துவிட்டு, பிறகு கேரம் விளையாட்டில் ஈடுபடலாம் என வலியுறுத்துகிறார்.

சுங்கத்துறையில் மரியா அவர்கள், 1979ம் ஆண்டு முதல் 1991ம் ஆண்டு வரை பணிபுரிந்த காலத்தில், 1982ம் வருடம் முதன்முறையாகவும், பின்பு ஏழு முறையும் தேசிய விருது வென்றார். 1989ம் ஆண்டு, அவர் முதன்முறையாக அனைத்துலக விருதையும், ஸூரிச் நகரில் நடைபெற்ற ஒற்றையர் போட்டியில் உலகக் கோப்பையையும் வென்றார்.
பின்பு, தன் பணியிலிருந்து ராஜினாமா செய்துவிட்டு, இந்தியன் ஏர்லைன்ஸ் விமான நிறுவனத்தில், போக்குவரத்து உதவியாளராக சேர்ந்தார். அங்கு அவருக்கு கேரம் விளையாட்டில் வென்ற சுவடுகளுக்கு இணையான சிறப்பு பதவி உயர்வுகள் கிடைத்தன.

1991ம் ஆண்டில், மரியா தன் ஆறு வயது மகளை இழந்தபோது, மீண்டும் தன் வாழ்க்கையின் குறிக்கோள் என்ன என்ற கேள்வியால் மன உளைச்சல் அடைந்தார். அவர் கேரம் விளையாட்டில், தன் கவனம், ஆர்வம் மற்றும் ஊக்கத்தை இழந்தார். மறுபடியும் அவரது வழிகாட்டி அன்பர்கள்தான் அவரை வற்புறுத்தி, தன்னிரக்க நினைவு ஆழ்ந்திருத்தலில் இருந்து, அவரை வெளியே கொண்டுவந்தார்கள் என்று மரியா நினைவுகூர்கிறார்.
வாழ்வில், ஒரு இனிமையான பாட்டுதான் பலமுறை நம் சோகத்தின் வெளிப்பாடாகும். மரியா மீண்டும் விளையாட ஆரம்பித்து, வர திறமைக்குச் சான்றாக, அகில உலக விருதை திரும்பவும் வென்றார். கேரம் விளையாட்டுதான், அவர் விழுந்த ஆழமான குழியில் இருந்து, அவரை வெளியே வரவைத்து காப்பாற்றியது என கூறுகிறார். ஏனெனில், அவர் அப்படி வெளியே வரும்போது, வேகமாய் எழும்பி, விளையாட்டின் உச்ச நிலைக்கு உயர்ந்தார்.

மரியா, கூர்ந்த கவனத்துடன் கூடிய, செயல் வல்லமைகளை வளர்க்கும் பயிற்சியின் முக்கியத்துவத்தை மிகவும் வலியுறுத்துகிறார். புதுமுகங்களுக்கு தினமும் இரண்டு மணி நேர பயிற்சி உதவும் என மரியா கருதுகிறார்.

1995ம் ஆண்டில், மரியா, அவருடைய இரண்டாம் அகில உலக விருதை வென்றார். 1997ம் ஆண்டில், மதிப்பு மிக்க அர்ஜுனா விருது அவருக்கு வழங்கப்பட்டது. இன்று வரை, அர்ஜுனா விருது பெற்ற ஒரே கேரம் விளையாட்டு வீரர் மரியா அவர்கள் மட்டுமே. பின்பு, அவர் தொடர்ந்து, நினைவில் வைக்கத்தக்க பல போட்டிகளில் வெற்றி பெற்றார். அவைகளுள், 1998 மற்றும் 1999ம் ஆண்டுகளில், மாலத்தீவில் நடந்த தெற்காசிய நாடுகளின் பிராந்திய கூட்டமைப்பு அளவில் போட்டிகள், 1998ம் ஆண்டு பாரிஸ் நகரத்தில் நடந்த பிரஞ்சு திறந்த சுற்று, 1998ம் ஆண்டில் லண்டனில் நடந்த “சாம்பியன்களில் சாம்பியன்” போட்டி மற்றும் 1997ம் ஆண்டில் நடந்த அமெரிக்கா ஐக்கிய நாட்டு திறந்த சுற்று ஆகியவை அடங்கும். அவர் 1997ம் ஆண்டில் அர்ஜுனா விருதை வென்றபின், அடுத்து என்ன என வியந்தார். வெற்றிகளின் சிகரத்தில் இருக்கும் ஒருவர் கேட்கும் வழக்கமான கேள்விதான் அது. அவருடைய சமகால வெற்றியாளர்களுடன், மறுமலர்ச்சிக்கு திட்டமிடும்போது, பெருந்துயரம் ஒன்று அவரைத் தாக்கியது. 2012ம் ஆண்டில், ஒரு துரதிருஷ்டவசமான விபத்தில், அவர் தன் மனைவியை இழந்தார்.

மரியா 2014ம் ஆண்டு இந்தியன் ஏர்லைன்ஸ் நிறுவனத்திலிருந்து பணிஓய்வு பெற்றார். அப்போதிருந்து, சென்னை மாவட்ட கேரம் விளையாட்டு சங்கத்தின் கவுரவ பொதுச் செயலராக சேவை செய்து வருகிறார். மேலும் அவர் அகில இந்திய கேரம் சங்கங்களின் கூட்டமைப்பின் தனிக்குழுவின் இணைத்தலைவர் மற்றும் ஆலோசகராகவும் இருக்கிறார்.
அவர் “மரியா பன்னாட்டு கேரம் பயிற்சியகம்” என்ற அமைப்பை நடத்துவதன் மூலம் வளரும் கேரம் ஆட்டக்காரர்களுக்கு முறையான பயிற்சி அளிக்கிறார். அவர் கொடுக்கும் பயிற்சிகளில் பல உத்திகளை கற்பிக்கிறார். குறைந்த விசையில் அதிக தாக்கம் கொடுக்கும் அடி முறைகள், இரண்டு காய்களின் நடுவே உள்ள தூரத்தைக் கணக்கிடுதல், சரியான தொடுகோடு அமைய தாக்கி வைக்க வேண்டிய சரியான இடங்கள், பொருத்தமான விரலமைப்பு உத்திகள் (கத்தரித்தல், பெருவிரல் பயன்பாடு, ஆள் காட்டி விரல் பயன்பாடு முறை), எதிராளியை மடக்கும் வழிகள் மற்றும் தாக்கும் போது சரியான உடல் அசைவுகள் என பல்வேறு உத்திகளை பயிற்றுவிக்கிறார். மேலும், உண்மையான ஆர்வமும், உள்ளார்ந்த திறமையும் காட்டும் ஆட்டக்காரர்கள் அவர் பாதையில் வந்தால், அவர்களுக்கு இலவச பயிற்சியும், வழி காட்டுதலும் செய்கிறார். அவரிடம் பயின்ற பல மாணவர்களில் ஒருவரான, 10 வயதிலிருந்தே கேரம் விளையாடிவரும், 19 வயதுள்ள நாக ஜோதி என்ற இளம் பெண், இன்று ஒரு இளைஞர் நிலை முதன்மை வெற்றியாளர். அப்பெண், தன் வழிகாட்டியும் குருவும் எட்டிய வெற்றி எல்லைகளை தொட முடியும் என நம்புகிறார்.

இப்போதெல்லாம் இந்த கேரம் ஆட்டம், ஏதோ ஒரு ஆதாயத்தை அடைய, ஓர் வழிவகையாக விளையாடப்படுகிறது என வருத்தம் கலந்த குறிப்புடன் மரியா பேசுகிறார். ஒரு ஆட்டக்காரர், தேசிய அளவில் விளையாட தகுதியும், நம்பிக்கை காட்டும் திறனும் பெற்றவுடன், நிச்சயம் ஒரு நல்ல வேலை கிடைப்பது உறுதியாகிறது. இக்காரணத்தினால்தான், கேரம் விளையாட்டு, சமுதாயத்தின் அடித்தட்டு மக்களிடையே அடிக்கடி காணப்படுகிறது. இதன் மூலம், சில சமயம் கீழ் நோக்கிய மதிப்பீடு கொண்ட, அச்சம் தரும் ஒரு கூட்டமைப்புடன் ஒரு புதிய கலாச்சாரமே உருவாகிறது. அவருடைய கருத்தில், தடைகளையும், கஷ்டங்களையும் பார்த்த, ஏழ்மைச் சூழ்நிலைகளில் வசிக்கும் மனிதர்கள்தான், தளராது நீடிக்கவும், தொடர்ந்து போட்டியிடும் மன உறுதியும் பெற்று, விளையாட்டின் மூலம் தம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்வார்கள்.

கேரம் ஆட்டத்திற்கு ஒரு பிரகாசமான எதிர்காலம் உள்ளதென மரியா நம்புகிறார். சதுரங்கம் மற்றும் கிரிக்கெட் போன்ற மற்ற விளையாட்டுகளைப் போல், ஊடகங்கள் கேரம் ஆட்டத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கும் காலம் வர வேண்டும் என்று மரியா கனவு காண்கிறார்.
நம் அரசாங்கமும், கேரம் விளையாட்டில் போட்டியிட்டு, நாட்டுக்கே பெருமை சேர்த்த வீரர்களின் பங்களிப்பை ஏற்று அங்கீகரிக்க வேண்டும் என அவர் விழைகிறார்.
இந்த ஆட்டக்காரர்கள், அடிக்கடி பல எதிர்பாரா தடங்கல்களை எதிர்கொண்டு விளையாடுவதால், சிறிய ஊக்குவிப்புகள் கூட நெடுந்தூரம் அவர்களைக் கொண்டு செல்லும்.
மேலும், பெரும் நிறுவனங்களும், இந்த ஆட்டத்தை உயர்ந்த நிலைக்கு எடுத்துச் செல்ல முன்வரவேண்டும் என அவர் நினைக்கிறார். இந்த ஆட்டம் பழகும் இளைஞர்கள், தளராத முனைப்புடன், மேன்மை பெற, தங்களுக்குள் ஒரு தீயை வளர்த்துக்கொள்ள வேண்டும் என அவர் விரும்புகிறார்.
மேலும், பெற்றோர்களும் இந்த ஆட்டத்தை தம் குழந்தைகளுக்காக பேணிக்காத்து வர வேண்டும் என அவர் விழைகிறார். எல்லாவற்றையும் விட, இந்த ஆட்டம் ஒருவரின் மனதில் உள்ள பேரார்வத்தை கண்டுபிடிக்கவே விளையாடப்படவேண்டும் என்று அவர் விரும்புகிறார். அவர் வாழ்நாளில், எதிர்கால முதன்மை வெற்றியாளர்களை உருவாக்கி, கேரம் விளையாட்டின் மறைந்த கவர்ச்சியையும், புகழையும் மீண்டும் நிலைநாட்ட விரும்புகிறார். ஒரு மனிதனின் மனத்தால், அவன் எண்ணத்தில் உருவாகி, நம்பும் எதையும் அடைய முடியும் என்பது நிஜமான உண்மை ஆகும். மரியாவின் மனம் அப்படிப்பட்ட ஒன்று. அந்த மனதின் ஒளித் தெறிப்புகளைப் புறக்கணிப்பது கடினம். நம்பிக்கை என்ற ஒன்றைத்தான், வரும் பல தலைமுறைகளுக்காக, இந்த ஆட்டத்தின் பிரகாசமான விடியலுக்காக, அவர் தொடர்ந்து பற்றிக்கொண்டு இருக்கிறார்.

சொ. விநாயகமூர்த்தி

